# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (18.05.2024 முதல் 22.05.2024)

**அறிக்கை எண் 040/2024** **தேதி.17.05.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் 14.05.24 முதல் 16.05.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C முதல் 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (14.05.2024 முதல் 16.05.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 22.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14/05 | 15/05 | 16/05 | தேதி | நாள்-1 18/05 | நாள்-2 19/05 | நாள்-3 20/05 | நாள்-4 21/05 | நாள்-5 22/05 |
| 6.7 | 2.0 | 4.6 | மழை (மி.மீ) | 11 | 29 | 11 | 10 | 12 |
| 34 | 34 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 32 | 31 | 31 | 30 |
| 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 22 | 22 | 21 |
| 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 76 | 87 | 83 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 61 | 56 | 50 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 60 |
| 17 | 15 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 6 | 4 | 6 |
| 230 | 340 | 200 | காற்று வீசும் திசை | 290 | 270 | 250 | 270 | 270 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (18.05.2024 முதல் 22.05.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்று மணிக்கு 4-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **18-05-2024** | 12.0 | 13.0 | 10.0 | 22.0 | 16.0 | 9.0 | 17.0 | 12.0 | 10.0 | 22.0 | 13.0 | 20.0 | 14.0 | 18.0 |
| **19-05-2024** | 24.0 | 24.0 | 25.0 | 24.0 | 24.0 | 26.0 | 24.0 | 19.0 | 25.0 | 23.0 | 25.0 | 23.0 | 16.0 | 23.0 |
| **20-05-2024** | 12.0 | 13.0 | 10.0 | 24.0 | 16.0 | 9.0 | 17.0 | 12.0 | 10.0 | 22.0 | 13.0 | 21.0 | 18.0 | 19.0 |
| **21-05-2024** | 12.0 | 13.0 | 9.0 | 25.0 | 16.0 | 8.0 | 17.0 | 12.0 | 9.0 | 22.0 | 13.0 | 22.0 | 21.0 | 20.0 |
| **22-05-2024** | 12.0 | 13.0 | 11.0 | 18.0 | 17.0 | 10.0 | 17.0 | 12.0 | 11.0 | 22.0 | 14.0 | 19.0 | 16.0 | 18.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 4 - 20 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை ஒத்திவைக்கவும். பயிர் கழிவு மூடாக்கு இடவும். மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.<br>அதிகப்படியான மழைநீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிக்கலாம்.<br>தொடர்ச்சியாக மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை ஒத்தி வைக்கவும். |
| நெல் | விதைப்பு | மழை எதிர்பார்க்கப்படுவதால் புதியதாக விதைப்பு செய்த நாற்றாங்காலில் மாலைவேளைகளில் நீரினைத்தேக்கி காலையில் வடிப்பதனால் மழையின் வேகத்தால் விதைமுளைப்பு பாதிக்கப்படுவதனைத் தவிர்க்கலாம். இதுவலை விதைப்பு செய்யாவிடில் விதைப்பினை ஒத்திவைக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>மழை பெய்துள்ளதால் ஏற்பட்ட மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு வடிகால் வசதியுடன்பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | நிலம் தயாரித்தல் | பெய்துள்ள மழையை பயன்படுத்தி வடிகால் வசதியுடன் தொடர்ந்து மஞ்சள் நடவு செய்யவும். |
| மரவள்ளி | அறுவடை | பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யலாம். |
| வாழை | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகுடில்களின் கூரைகளைப் மழைநீர் ஒழுகாமல் பராமரிக்கவும். |

## குறுஞ்செய்தி

- தொடர்ச்சியாக மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை ஒத்தி வைக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**